# 61 ஆவது ஆண்டு

# ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

## (இறைவனது தொண்டில் 61வது ஆண்டு)

**24-10-2014** முதல்
**30-10-2014** முடிய

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- மஹாருத்ரம்
- ஷண்முகார்ச்சனை
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- அருணகிரிநாதர் விழா
- திருப்புகழ் இன்னிசை
- சொற்பொழிவு
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்




ஆடும்பரி



வேல்



அணிசேவல்

எனப் பாடும் பணியே பணியா அருள்வாய்

பக்தி உடனுருகி நித்த முனதடிகள்
பற்று மருள் நினைவு தருவாயே

# முருகன் திருவருட் சங்கம்

சென்னை-600005 ☎ 044-2854 4713

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

முருகா என ஓர் தரம் ஓது அடியார்
முடிமேல் இணை தாள் அருள்வோனே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா என ஓத அருள்வாயே

எருவாய் - **திருவீழிமிழலைத் திருப்புகழ்**

# 61 ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா




## *24-10-2014 வெள்ளிக்கிழமை முதல் 30-10-2014 வியாழக்கிழமை முடிய*

விழா நடைபெறும் இடம் :

## அல்லத்தூர் நாதமுனி ராமானுஜ கூடம்

52/37, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005. ☎ : 044 - 2844 4367

முருகா என்று உள்ளம் உருகி, ஒருமுறை ஓதும்படியான அடியவர்களின் சிரத்தின் மீது இரண்டு திருவடிகளையும் வைத்து அருள்புரிபவரே ! ஒருமுறையாவது முருகா ! பரம்பொருளே ! குமரா ! என்று அடியேன் கூறித் துதி செய்து உய்யுமாறு உயிரைக் காத்து அருள்வீர்.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

அருவரை எடுத்த வீரன் நெரிபட விரல்கள் ஊனு(ம்)
அரன் இடம் இருக்கும் ஆயி அருள்வோனே
பதமலர் உளத்தில் நாளும் நிறைவுறு கருத்தர் தாள்கள்
பணியவும் எனக்கு ஞானம் அருள்வாயே
அருவரை - **வயிரவிவனம் திருப்புகழ்**

உ
முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம்

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
ஸ்தாபிதம் : 1954 ☎ : 2854 4713

ஆனை முகவற்கு இளைய ஐயனின் திருவருளினால் சங்கத்தின் 61ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா **24-10-2014** வெள்ளிக்கிழமை முதல் **30-10-2014** வியாழக்கிழமை முடிய ஏழு தினங்கள் நிகழ்ச்சி நிரலில் கண்ட வண்ணம் திருவல்லிக்கேணி அல்லத்தூர் நாதமுனி ராமானுஜ கூடத்தில் நடைபெற உள்ளது.

அடியார்கள் சங்கத்தின் இந்த **61ஆவது** ஆண்டில் நடைபெறும் ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன், தங்களால் இயன்ற அளவு **பொருளுதவிகளை** அளித்து விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைவதற்குத் தங்கள் **பேராதரவினை நல்கி**, வேண்டுகின்ற அடியார்களுக்கு வேண்டிய அரிய பொருள்களை வேண்டுமளவில் வழங்கும் ஸ்ரீ வள்ளி குஞ்சரி மணவாளப் பெருமானின் திருவருளினால் வாழ்க்கையில் இஹபர சௌபாக்கியத்துடனும், சகல செல்வயோகமிக்க பெருவாழ்வுடனும் வாழப் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்,
**முருகன் திருவருட் சங்கத்தார்**

அருமையான திருக்கயிலாய மலையைப் பெயர்த்து எடுத்த இராவணனது உடம்பு நெரிந்து வருந்த, திருவடியில் விரலைச் சிறிது ஊன்றி அருளிய சிவபெருமானுடைய இடப்புறத்தில் வீற்றிருக்கும் உமையம்மையாரது புதல்வரே ! உமது திருவடிக் கமலங்களை இடைவிடாது உள்ளத்தில் சிந்திக்கின்ற மெய்யடியார்களுடைய பாதங்களை அடியேன் பணியுமாறு நல்ல ஞானமாகிய அறிவைத் தந்து அருள்புரிவீர்.'

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

சுருதி மறை வேள்வி மிக்க **மயிலை நகர்** மேவு(ம்) உக்ர
துரகத கலாப பச்சை மயில்வீரா
வரி அளி உலாவு துற்ற இருபுயம் அளாவி வெற்றி
மலர் அணையில் நீ அணைக்க வரவேணும்
களபமணி - **திருமயிலைத் திருப்புகழ்**

## நிகழ்ச்சி நிரல்

**24-10-2014 வெள்ளிக்கிழமை முதல் 28-10-2014 செவ்வாய்க்கிழமை முடிய** ஐந்து தினங்களும், காலை 7.00 மணி முதல் பிற்பகல் வரை **ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமிக்கு** அபிஷேக ஆராதனைகளுடன் மஹா ருத்ர ஜபமும், ஷண்முகார்ச்சனையும், மாலையில் ருத்ர ஜபமும், இன்னிசை நிகழ்ச்சிகளும், சொற்பொழிவுகளும் நடைபெற உள்ளன. 26-10-2014 ஞாயிற்றுக்கிழமை அன்று அதிகாலை சூரிய நமஸ்காரமும் அதனைத் தொடர்ந்து **அருணகிரிநாதர் விழாவினை** முன்னிட்டு காலை 8.00 மணி முதல் திருப்புகழ் அகண்ட பஜனை வழிபாடும், **29-10-2014** புதன்கிழமை **மஹா ஸ்கந்த ஷஷ்டி** அன்று காலை கணபதி ஹோமத்துடன் **மஹாருத்ர ஜப ஹோம பூர்த்தியும், கலசாபிஷேகமும், லக்ஷார்ச்சனைப் பூர்த்தியும், குமார போஜனமும், அன்னதானமும்** மறுதினம் **30-10-2014** வியாழக்கிழமை அன்று காலை **ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாண வைபவமும்** நடைபெற உள்ளன.



வேதங்களும், மந்திரங்களும், யாகங்களும் நிரம்பிய திருமயிலையில் எழுந்தருளியுள்ள வேகமுடைய குதிரை போன்ற தோகையுடன் கூடிய பச்சை மயில் வாகனத்தை உடைய வீரமூர்த்தியே ! வரிகளுடன் கூடிய வண்டுகள் உலாவும் உமது இரு புயங்களைத் தழுவி எனது எண்ணம் வெற்றி பெற இம்மலர்ப் படுக்கையில் என்னைத் தழுவ வந்தருளுவீர்.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

**கோசைநகர்** வாழ வரு(ம்) ஈச அடியர் நேச சரு(வ)
ஈச முருகா அமரர் பெருமாளே
நான் அனுதினா தினமும் நினையவே கிருபை
நாடி அருளே அருள வருவாயே

ஆதவித - **கோசைநகர்த் திருப்புகழ்**

## 24-10-2014 வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 07.00 மணி | **விக்னேச்வர பூஜை,** மஹாருத்ர ஜப ஸங்கல்பம், ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப்பெருமானுக்கு அபிஷேக, ஆராதனை தொடர்ந்து **ஈசான முக** (மேல்நோக்குதல்) ஸஹஸ்ர நாம அர்ச்சனை |
| மாலை<br>மாலை | 03.30 மணி முதல்<br>05.20 மணி வரை | **மஹாருத்ர ஜபம்** |
| மாலை<br>இரவு | 05.25 மணி முதல்<br>07.25 மணி வரை | திருப்புகழ் இன்னிசை<br>திருப்புகழ் மாமணி ஸ்ரீ V. **லக்ஷ்மி நாராயணன்**<br>ஸ்ரீ M. **வேணுகோபால்** - ஹார்மோனியம்<br>ஸ்ரீ K.Y. **கணபதிராமன்** - ஹார்மோனியம்<br>ஸ்ரீ G. **கார்த்திக்** - மிருதங்கம் |
| இரவு<br>இரவு | 07.30 மணி முதல்<br>09.00 மணி வரை | ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம்<br>நிகழ்த்துபவர் ஸ்ரீ S. **கணேச சர்மா**<br>தலைப்பு : **அவதார காண்டம்** |

## 25-10-2014 சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை<br>பகல் | 07.00 மணி முதல்<br>12.00 மணி வரை | **மஹாருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு** அபிஷேக ஆராதனை தொடர்ந்து (பூர்வ) **தத்புருஷ முக** (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ர நாம அர்ச்சனை |
| மாலை<br>மாலை | 03.30 மணி முதல்<br>05.25 மணி வரை | **மஹாருத்ர ஜபம்** |

கோசை நகரில் வீற்றிருக்கின்ற தலைவரே ! அடியார்களுக்குப் பிரியமானவரே ! எல்லோருக்கும் தலைவரே ! முருகப் பெருமானே ! தேவர்கள் போற்றும் பெருமையில் மிகுந்தவரே ! அடியேன் நலம் பெற்று உய்ய நாள்தோறும் நினைக்குமாறு உம்முடைய கருணையை நாடிய எனக்குத் திருவருளை அடையும் பொருட்டு வந்தருள்வீராக.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

அரிய சமயம் ஒருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியும் அயனும் ஒருகோடி இவர் கூடி
அறிய அறிய அறியாத அடிகள் அறிய அடியேனும்
அறிவு உள் அறியும் அறிவு ஊற அருள்வாயே

சுருதிமறை - **உத்திரமேரூர்த் திருப்புகழ்**

---

| | |
|---|---|
| மாலை 05.30 மணி | ஷஷ்டி விழா மலர் வெளியீடு<br>**நவக்ரஹ ஸ்தோத்ரங்கள்**<br>**(விளக்க உரையுடன்)** |
| இறை வணக்கம் | திருப்புகழ் மாமணி<br>ஸ்ரீ **V. லக்ஷ்மிநாராயணன்** |
| துவக்க உரை | ஸ்ரீ **S. ஸ்வாமி நாதன்**<br>Dy. Director TAIB Bank (Retd.), Bahrain |
| தலைமை உரை வழங்கி மலரினை வெளியிட்டு வழங்குபவர் | ஸ்ரீ **G.V. ராமன்**<br>Managing Director (AVANT - GARDE Engineers and Consultants (P) Ltd.)<br>Porur Kundrathur High Road, Porur,<br>Chennai - 600 116. |
| சிறப்பு விருந்தினர்கள் | ஸ்ரீ **S. பாலஸுப்ரஹ்மணியன்**<br>Director (AVANT - GARDE Engineers and Consultants (P) Ltd.)<br>Porur Kundrathur High Road, Porur,<br>Chennai - 600 116.<br><br>ஸ்ரீ **B. கிருஷ்ணகுமார்**<br>Dy. General Manager, Sundaram Motors Ltd., (Retd.)<br>(திருப்புகழ் மணி அவர்களின் பேரன்)<br>Chennai - 600 017.<br><br>ஸ்ரீ **K.V. ஸுப்ரஹ்மணியன்**<br>Asst. Executive Engineer, TNEB (Retd.)<br>(உப-தலைவர்), முருகன் திருவருட் சங்கம்,<br>சென்னை - 600 005. |
| மலரின் பிரதிகளை பெறும் வேதவித்துக்கள் | ஸ்ரீ **K. விக்னேஷ பட் (கனபாடிகள்)**<br>**ரிக்வேத அத்யாபகர்**<br>Shivapeetha Shivarama Veda Pathashala, Sriperumbudur,<br>Chennai.<br><br>ஸ்ரீ **ஷண்முக பட்**<br>**ரிக்வேத அத்யாபகர்**<br>Mahati Veda Pathashala, Madipakkam, Chennai - 600 091. |

---

அரிய கருத்துக்களுடன் கூடிய ஒரு கோடி சமயத்தார்கள், நூறு கோடி தேவர்கள் அடியார்கள், ஒரு கோடி நாராயணர்கள் நான்முகர்கள், ஆகிய இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆராய்ந்து, ஆராய்ந்து பார்த்து, அறிய முடியாத உமது திருவடிகளை அடியேன் அறிந்து கொள்ளுமாறு, அறிவினுக்குள் அறியும் அறிவு வெளிப்பட அருள் புரிவீர்.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

செயல் அமைந்த வேத தொனி முழங்கு வீதி
**திருவிரிஞ்சை** மேவு பெருமாளே
உருவம் ஒன்று(ம்) இலாத பருவம் வந்து சேர
உபய துங்க பாத(ம்) அருள்வாயே
மருவு மஞ்சு - **விரிஞ்சிபுரம் திருப்புகழ்**

---

மலரின் பிரதிகளை பெறும் வேதவித்துக்கள்

**Dr. K. ஷியாமஸுந்தரா**
**ரிக்வேதம்**
Asst. Professor in **Vyakarana**, Madras Sanskrit College, Chennai - 600 004.

**ஸ்ரீ K. ஜெய நாராயணன்**
**யஜுர்வேதம்**
Asst. Professor in **Mimamsa**, Madras Sanskrit College, Chennai - 600 004.

**ஸ்ரீ V. இராமகிருஷ்ண ஸ்ரௌதிகள்**
**ஸாமவேதம்**
Asst. Professor in **Advaita Vedantam**, Madras Sanskrit College, Chennai - 600 004.

**ஸ்ரீ K.S. கிருஷ்ணமூர்த்தி**
**ஸாமவேதம்**
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

**ஸ்ரீ R. நாகராஜ ஸ்ரௌதிகள்**
**ஸாமவேதம்**
திருமயிலை, சென்னை - 600 004.

**ஸ்ரீ ஸீதாராம சாஸ்திரிகள்**
**அதர்வணவேதம்**
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

**ஸ்ரீ பாலாமணி சாஸ்திரிகள்**
**அதர்வணவேதம்**
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033.

நன்றியுரை

**ஸ்ரீ K. ரெங்கநாதன்**
Supdt., Education Dept., (Retd.), K.V. Kuppam, Nellore Dist.

இரவு 07.30 மணி முதல்
இரவு 09.00 மணி வரை

ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம்
நிகழ்த்துபவர் ஸ்ரீ **S. கணேச சர்மா**
தலைப்பு : **விஜய யாத்ரா காண்டம்**

---

ஒழுக்கம் வாய்க்கப் பெற்றதும், வேத ஒலி முழங்க திருவீதிகளுடன் கூடிய திரிவிரிஞ்சிபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமிதம் உடையவரே ! ஓர் உருவம் ஒன்றும் இல்லாததும் ஆகிய ஐக்கிய நிலையாகிய பருவத்தினை அடியேன் சேருமாறு, உம்முடைய தூய்மையான இரண்டு திருவடிகளைத் தந்து அருள்புரிவீர்.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

உததி மீதிலே சாயும் உலக மூடு சீர்பாத(ன்)
உவண(ம்) ஊர்தி மாமாயன் மருகோனே
வனச மாமியார் ஆட நெடிய மாமனார் ஆட
மயிலும் ஆடி நீ ஆடி வரவேணும்

அதலசேட - **பொதுத் திருப்புகழ்**

## 26-10-2014 ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை | 06.30 மணி | **சூர்ய நமஸ்காரம்** |
| காலை | 07.30 மணி | **மஹா ருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு** அபிஷேக ஆராதனை, தொடர்ந்து (தக்ஷிண) (தெற்கு நோக்குதல்) **அகோர முக** ஸஹஸ்ர நாம அர்ச்சனை |
| காலை | 08.00 மணி முதல் | **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா** |
| பிற்பகல் | 02.00 மணி வரை | திருப்புகழ் அகண்ட பஜனை வழிபாடு நிகழ்த்துபவர்கள் முருகன் திருவருட்சங்கத்தினர் 51 திருப்புகழ் மற்றும் அநுபூதி அலங்காரம் வகுப்புகளிலிருந்து ஒருசில பாடல்கள் |

| | |
|---|---|
| ஸ்ரீ **M. கணேஷ்ராமன்** | - மிருதங்கம் |
| ஸ்ரீ **G. கார்த்திக்** | - மிருதங்கம் |
| சிதம்பரம் ஸ்ரீ **B. சாய்சங்கர்** | - மிருதங்கம் |
| ஸ்ரீ **ஸ்ரீவத்ஸன்** | - டோல்கீ |
| ஸ்ரீ **M. வேணுகோபால்** | - ஹார்மோனியம் |
| ஸ்ரீ **K.Y. கணபதிராமன்** | - ஹார்மோனியம் |
| ஸ்ரீ காளியாக்குடி **N. சேகர்** | - கஞ்சிரா |
| ஸ்ரீ **V. லக்ஷ்மிநாராயணன்** | - முகர்சிங் |

| | | |
|---|---|---|
| மாலை | 04.00 மணி முதல் | ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம் |
| மாலை | 05.30 மணி வரை | நிகழ்த்துபவர் ஸ்ரீ **S. கணேச சர்மா** தலைப்பு : **அத்புத காண்டம்** |
| மாலை | 05.35 மணி முதல் | **மஹாருத்ர ஜபம்** |
| இரவு | 07.00 மணி வரை | |
| இரவு | 07.05 மணி முதல் | திருப்புகழ், பக்திப் பாடல்கள் இன்னிசை |
| இரவு | 09.00 மணி வரை | ஸ்ரீ **கார்த்திக் கணேஷ்ராமன்** |

| | |
|---|---|
| ஸ்ரீ **M. விஜய்** | - வயலின் |
| சிதம்பரம் ஸ்ரீ **B. சாய் சங்கர்** | - மிருதங்கம் |

அலைகள் மோதுகின்ற கடலின் நடுவே கிடக்கின்ற உலகத்தை ஓரடியால் அளந்து மூடிய சிறந்த திருவடியை உடையவரும், கருடவாகனருமாகிய திருமாலின் திருமருகனே ! உமது மாமியாராகிய இலக்குமி தேவி ஆடவும், நீண்ட வடிவுடைய மாமனாராகிய ஸ்ரீ நாராயணமூர்த்தி ஆடவும், மயில் வாகனம் ஆடவும் அதன் மீது தாங்கள் ஆடிக்கொண்டு வந்து அருள்புரிவீர்

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

சென்று அசுரர் அஞ்ச வென்று குன்றிடை மணம் புணர்ந்து
செந்தில் நகர் வந்து அமர்ந்த பெருமாளே
பண்பு உடைய சிந்தை அன்பர் தங்களின் உடன் கலந்து
பண்பு பெற அஞ்சல் அஞ்சல் என வாராய்
கண்டுமொழி - **திருச்செந்தூர்த் திருப்புகழ்**

## 27-10-2014 திங்கட்கிழமை

காலை 07.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை — **மஹாருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு** அபிஷேக ஆராதனை (உத்தர) **வாமதேவ முக** (வடக்கு நோக்குதல்) ஸஹஸ்ர நாம அர்ச்சனை

மாலை 03.30 மணி முதல் மாலை 05.25 மணி வரை — **மஹாருத்ர ஜபம்**

மாலை 05.30 மணி முதல் இரவு 07.00 மணி வரை — திருப்புகழ் இன்னிசை
குமாரி **வைஷ்ணவி லக்ஷ்மி நாராயணன்**
பரூர் ஸ்ரீமதி **M.K. அனந்தலக்ஷ்மி** - வயலின்
ஸ்ரீ **இராமகிருஷ்ணன்** - மிருதங்கம்
ஸ்ரீமதி **G.M. க்ருஷ்ணப்ரியா** - கஞ்சிரா

இரவு 07.10 மணி முதல் இரவு 08.40 மணி வரை — ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம்
நிகழ்த்துபவர் ஸ்ரீ **S. கணேச சர்மா**
தலைப்பு : **உபதேச காண்டம்**

## 28-10-2014 செவ்வாய்க்கிழமை

காலை 07.00 மணி முதல் பகல் 12.00 மணி வரை — **மஹாருத்ர ஜபத்துடன் முருகப்பெருமானுக்கு** அபிஷேக ஆராதனை, தொடர்ந்து **ஸத்யோஜாத முக** (மேற்கு நோக்குதல்) ஸஹஸ்ர நாம அர்ச்சனை

மாலை 03.30 மணி முதல் மாலை 05.15 மணி வரை — **மஹாருத்ர ஜபம்**

மாலை 05.30 மணி முதல் இரவு 07.00 மணி வரை — திருப்புகழ் இன்னிசை
ஸ்ரீமதி **கோமதிஸ்ரீ**
ஸ்ரீ **R. ஹரிஹர ஸுப்ரமணியன்** - மிருதங்கம்
ஸ்ரீ **R. தக்ஷிணாமூர்த்தி** - கீபோர்டு

சூராதி அசுரர்கள் அஞ்சுமாறு வென்று திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை அம்மையாரை மணம் புரிந்து திருச்செந்தூரில் விருப்பமுடன் வாழ்கின்ற பெருமிதமுடையவரே! உமது திருப்புகழை ஓதுகின்ற பண்புமிக்க அடியார்களுடன் கூடி நல்ல பண்பினைப் பெற்று உய்ய "அஞ்சேல்" "அஞ்சேல்" என்று கூறி வந்தருள வேண்டும்.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

ஓ பரம(ர்) அருளிய கடம்ப முருக அறுமுகவ கந்த
**பழநிமலை** தனில் அமர்ந்த பெருமாளே
எனது தலைமிசை அணிந்து அழுது அழுது உன் அருள் விரும்பி
இனிய புகழ்தனை விளம்ப அருள் தாராய்

விரை மருவு - **பழநித் திருப்புகழ்**

---

| | | |
|---|---|---|
| இரவு 07.00 மணி முதல் | | ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம் |
| இரவு 08.30 மணி வரை | | நிகழ்த்துபவர் ஸ்ரீ **S. கணேச சர்மா** |
| | | தலைப்பு : **அநுக்ரஹ காண்டம்** |

## 29-10-2014 புதன் கிழமை

## மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **கணபதி ஹோமம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகம்<br>மஹாருத்ர ஜப ஹோமம் பூர்த்தி, கலசாபிஷேகம்<br>தொடர்ந்து **அதோமுக** (கீழ் நோக்குதல்)<br>ஸஹஸ்ர நாம அர்ச்சனை |
| பிற்பகல் 01.30 மணி வரை | லக்ஷார்ச்சனை பூர்த்தி, குமார போஜனம், அன்னதானம் |
| மாலை 03.35 மணி முதல்<br>05.00 மணி வரை | **ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய த்ரிசதி அர்ச்சனை** |
| மாலை 05.05 மணி முதல்<br>மாலை 07.05 மணி வரை | **திருப்புகழ் இன்னிசை**<br>ஸ்ரீமதி **பவ்யா ஹரிசங்கர்**<br>குமாரி **R.S. ஸுதா ஐயர்** - வயலின்<br>கும்பகோணம் ஸ்ரீ **ஸ்வாமிநாதன்** - மிருதங்கம்<br>ஸ்ரீ **A.S. கிருஷ்ணன்** - மோர்சிங் |
| இரவு 07.10 மணி முதல்<br>இரவு 08.40 மணி வரை | ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம்<br>நிகழ்த்துபவர் ஸ்ரீ **S. கணேச சர்மா**<br>தலைப்பு : **ஸர்வக்ஞ்ய காண்டம்** |
| இரவு 08.45 மணி | **திருப்புகழ், வேல்மாறல் பாராயணம்**<br>ஸ்ரீ **N. அனந்த கிருஷ்ணன்** குழுவினர்<br>முருகன் திருவருட் சங்கம் |

---

ஓ பரம்பொருளாகிய சிவபெருமான் பெற்ற கடப்ப மாலை அணிந்தவரே ! முருகக் கடவுளே ! ஆறுமுகப் பெருமாளே ! கந்தவேளே ! பழநி மலை மீது எழுந்தருளியுள்ள பெருமிதம் உடையவரே ! உமது திருவடிகளை அடியேன் தலைமீது சூட்டி அழுது அழுது இனிய திருப்புகழைப் பாடி உய்யுமாறு திருவருளைத் தந்தருள்வீர்.

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

கைத்த அசுர ஈசர் மொய்த்த குல கால
கற்பதரு நாடர் பெருமாளே
நித்தம் நின தாளில் வைத்தது ஒரு காதல்
நிற்கும் வகை ஓத நினைவாயே
புற்புதமெனா - **திருச்செங்கோட்டுத் திருப்புகழ்**

## 30-10-2014 வியாழக்கிழமை

காலை 07.30 மணி முதல்
பிற்பகல் 01.00 மணி வரை
திருப்புகழில் **ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**
நிகழ்த்துபவர்கள் : ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினர், திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

மாலை 03.00 மணி முதல்
மாலை 03.30 மணி வரை
**வேத பாராயணம்**

மாலை 03.35 மணி முதல்
மாலை 05.05 மணி வரை
ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகள் சரித்திர ஸப்தாஹம்
நிகழ்த்துபவர் ஸ்ரீ **S. கணேச சர்மா**
தலைப்பு : **ஸ்மரண காண்டம்**

மாலை 05.10 மணி முதல்
மாலை 05.30 மணி வரை
விழா நிறைவு
மங்கள இசை - தீபாராதனை
**முருகன் திருவருட் சங்கத்தினர்**

### போஷகர்கள்

| | |
|---|---|
| ஸ்ரீ ஸுந்தரம் P. | திருவல்லிக்கேணி, சென்னை - 600 005 |
| ஸ்ரீ பாலசந்திரன் K.N. | மேற்கு மாம்பலம், சென்னை - 600 033 |
| ஸ்ரீ ரமணி R. | தியாகராயநகர், சென்னை - 600 017 |
| ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஸ்வாமிநாதன் V. | நங்கைநல்லூர், சென்னை - 600 061 |
| ஸ்ரீ அனந்த கிருஷ்ணன் N. | பெங்களூரு |
| ஸ்ரீ சந்த்ரமௌளி P. | மந்தைவெளி, சென்னை - 600 028 |
| ஸ்ரீ வேங்கடராமன் V. | அரும்பாக்கம், சென்னை - 600 106 |
| ஸ்ரீ ஸதாசிவம் K.S. | வடபழநி, சென்னை - 600 026 |
| ஸ்ரீ அனந்த ஸுப்ரமணியன் D. | திண்டுக்கல் |
| ஸ்ரீ கடம்பவன ஸுந்தரம் N. | காஞ்சிபுரம் |
| டாக்டர் ஜானகிராமன் L. | பெங்களூரு |

வெறுப்புடைய அசுரத் தலைவர்களின், நெருங்கிய குலத்துக்கு அழிவைச் செய்தவரே ! கற்பக மரம் பொருந்திய விண்ணவர்கள் போற்றும் பெருமிதம் உடையவரே ! தினந்தோறும் உமது திருவடியில் வைத்துள்ள ஒப்பற்ற அன்பானது நிலைத்து நிற்கும் வழியை உபதேசித்து, அருள வேண்டும்.

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

ஓ வேல் எடுத்துக் கரத்தில் நீல வெற்பில் தழைத்த
வேள் எனச் சொல் கருத்தர் பெருமாளே
ஆரணத்துக்கண் நத்து உன் நாள் மலர்ப் பொற் பதத்தை
யான் வழுத்திச் சுகிக்க அருள்வாயே

பூசலிட்டு - **திருத்தணித் திருப்புகழ்**

**தலைவர் : ஸ்ரீ கணேசன் V.** அபிராமபுரம், சென்னை - 600 018

**உப தலைவர் :** ஸ்ரீ ஸுப்ரமணியன் K.V. மதுரவாயல், சென்னை- 600 095

## செயலாளர் & பொருளாளர்

ஸ்ரீ சந்த்ரசேகர் N. திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

## இணைச் செயலாளர்கள்

ஸ்ரீ ஸ்ரீதர் S. மயிலை, சென்னை - 600 004

ஸ்ரீ ஜானகிராமன் V. நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

## செயற்குழு உறுப்பினர்கள்

ஸ்ரீ வால்மீகி S. அபிராமபுரம், சென்னை - 600 018

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி S. இராமாபுரம், சென்னை - 600 089

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் V. பள்ளிக்கரணை, சென்னை - 600 100

ஸ்ரீ இராமமூர்த்தி V. மடிப்பாக்கம், சென்னை - 600 091

ஸ்ரீ விச்வநாதன் N. (Jr.) அபிராமபுரம், சென்னை - 600 018

ஸ்ரீ ஸ்ரீதரன் S. மந்தைவெளி, சென்னை - 600 028

ஸ்ரீ கணேஷ்ராமன் M. கோடம்பாக்கம், சென்னை - 600 024

ஸ்ரீ நாராயணன் V.P. மயிலை, சென்னை - 600 004

ஸ்ரீ மோகன் S. மந்தைவெளி, சென்னை - 600 028

ஸ்ரீ ஸுப்ரஹ்மணியன் S. தியாகராய நகர், சென்னை - 600 017.

## கௌரவத் தணிக்கையாளர்

ஸ்ரீ ஹரேஷ் S. மயிலை, சென்னை - 600 004.



ஓ திருக்கரத்தில் வேலாயுதத்தை ஏந்தி, நீலோற்பல மலர் மலர்கின்ற திருத்தணி மலையின் மீது எழுந்தருளியுள்ளவரே ! அடியார்கள், செவ்வேட் பெருமாளே, என்று புகழ்கின்ற பெருமிதமுடையவரே ! வேதத்தின் கண் விரும்பித் துதிக்கின்ற உமது புதிய மலர் போன்ற அழகிய திருவடியை அடியேன் துதி செய்து சுகம் பெறத் திருவருள் புரிவீர்.

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

ௐ கூடிவரு சூரர் தங்கள் மார்பை இரு கூறு கண்ட
**கோடைநகர்** வாழ வந்த பெருமாளே
போகம் அதிலே உழன்று பாழ் நரகு எய்தாமல் உன்றன்
பூ அடிகள் சேர அன்பு தருவாயே

ஆதிமுதல் - **கோடைநகர்த் திருப்புகழ்**

---

## வெண்பா

**முருகன் திருவருட் சங்கத்தில்** நெஞ்சம்
உருகிப் புகுவார் தமக்குப் - பெருகுமே
அன்றே **பெரும் பொருளும் ஆண்டவன் பேரருளும்**
நன்றே நலம் பலவும் காண்

- அருட்கவிமணி காமாக்ஷிதாஸர்



முருகனது பாத கமலங்களை இருகைகளினால் பற்றித் தொழுது அவனது திருவருளினால் **முருகன் திருவருட் சங்கமானது** கடந்த 61 ஆண்டுகளாக சென்னைத் திரு அல்லிக்கேணியில் பிரகாசித்துக் கொண்டு வரும் ஓர் அற்புத ஆன்மிக நிறுவனம்

(தோற்றம் : 27-6-1954)

**வாழ்க முருகன் திருவருட் சங்கம்**

வளர்க **வைரவிழாவினைக்** காண


(அடியார்களின் அன்பிற்குப் பாத்திரரான கந்தனடித் சிறு தொண்டன் வே. கணேசன்)

---

ௐ ஒன்று கூடி வந்த அசுரர்களுடைய மார்பை இருகூறுகளாகப் பிளந்த கோடைநகரில் வாழ்கின்ற பெருமையில் சிறந்தவரே ! போக சுகங்களிலேயே திரிந்து, பாழான நரகத்தை அடியேன் அடையாமல் உமது மலர்ப் பாதங்களில் சேர்ந்து உய்யத் திருவருளைத் தந்தருள்வீர்.

ௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐௐ

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும் என்றன்
உள்ளத்துயரை ஒழித்து அருளாய்! ஒரு கோடி முத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடல் செந்தில் மேவிய சேவகனே!
வள்ளிக்கு வாய்த்தவனே மயில் ஏறிய மாணிக்கமே.



ஒரு கோடி முத்துக்களை தெள்ளிக் கொழிக்கும் படியான திருச்செந்தூர் கடற்கரையில் எழுந்தருளி இருக்கின்ற முருகப் பெருமானே! வள்ளிக்கு நாயகரே! மயில் வாகனத்தின் மீது விளங்குகின்ற மாணிக்கமே! இரு புறமும் தீப்பிடித்து எரியும் மூங்கில் குழாயினுள்ளே அகப்பட்டுக்கொண்ட எறும்பைப் போல, அடியேனுடைய மனத்துயரை நீக்கி அருள்வீர்.